பிரஸார் பாரதி
அகில இந்திய வானொலி, சென்னை-4
22 09 2025 7.15
திங்கட்கிழமை இரவு

# ஆகாஷவாணி செய்திகள்

## *தலைப்புச் செய்திகள்*

1. நவராத்திரி பண்டிகையையொட்டி, உஜ்வாலா திட்டத்தின்கீழ் இலவச சமையல் எரிவாயு இணைப்பு பெறும் 25 லட்சம் குடும்பத் தலைவிகளுக்கு பிரதமர் திரு நரேந்திர மோடி வாழ்த்துத் தெரிவித்துள்ளார்.

2. சரக்கு மற்றும் சேவை வரி சீர்திருத்தங்களால் நாட்டு மக்கள் அனைவரும் பயன்பெற்று வருவதாக மத்திய அமைச்சர் திரு ஜெ பி நட்டா தெரிவித்துள்ளார்.

3. தென்கொரியாவுடன் இணைந்து வளமான பொழுதுபோக்கு கட்டமைப்பை உருவாக்க இந்திய திரைத்துறையினர் ஆர்வம் கொண்டுள்ளதாக மத்திய இணையமைச்சர் டாக்டர் எல் முருகன் தெரிவித்துள்ளார்.

4. நாகாலாந்து மாநிலத்தில் செயல்பட்டு வரும் தேசிய சோஷலிஸ்ட் கவுன்சில் மற்றும் அதன் துணை அமைப்புகளுக்கு மத்திய உள்துறை அமைச்சகம் தடை விதித்துள்ளது.

5. ஆசிய Cadet வாள்வீச்சு போட்டியில் இந்தியா 3 தங்கம், 3 வெள்ளி, 8 வெண்கலப் பதக்கங்களை வென்றது

-- இனி விரிவான செய்திகள் ---

நவராத்திரி பண்டிகையின் தொடக்க நாளான இன்று 25 லட்சம் குடும்பங்களுக்கு பிரதமரின் உஜ்வாலா திட்டத்தின்கீழ், இலவச சமையல் எரிவாயு இணைப்புகளை வழங்க மத்திய அரசு முடிவு செய்துள்ளது.

புதிய இணைப்புகளை பெறும் குடும்ப தலைவிகளுக்கு தமது வாழ்த்துக்களை தெரிவித்துள்ள பிரதமர், நவராத்திரி நன்னாளில் சகோதரிகளுக்கும், தாய்மார்களுக்கும் உற்சாகத்தை அளிக்கும் வகையில் இந்த அறிவிப்பு வெளியிடப்பட்டதாக கூறியுள்ளார்.

மகளிருக்கான அதிகாரத்தை வலுப்படுத்தும் திட்டமாகவும் உஜ்வாலா அமைந்துள்ளது என்றும் பிரதமர் தெரிவித்துள்ளார்.

>><><><><<

சரக்கு மற்றும் சேவை வரி சீர்திருத்தங்களால் நாட்டு மக்கள் அனைவரும் பயன்பெற்று வருவதாக மத்திய அமைச்சர் திரு ஜெ பி நட்டா தெரிவித்துள்ளார்.

புதுதில்லியில் இன்று வர்த்தகர்களை சந்தித்து பேசிய அவர், உள்நாட்டு உற்பத்திப் பொருட்களை விற்பனை செய்து உற்பத்திக்கான இந்தியா சுயசார்பு நிலையை எட்டுவதற்கு ஒத்துழைப்பு தர வேண்டும் என்று கேட்டுக் கொண்டார்.

வர்த்தகத்தை எளிய முறையில் மேற்கொள்வதற்கு வசதியாக வரி சீர்திருத்தங்கள் அமைந்துள்ளதாகவும் அவர் கூறினார்.

சிறிய தொழில்களை ஊக்கப்படுத்தும் வகையில், ஜிஎஸ்டி வரிக் கட்டமைப்பு மாற்றியமைக்கப்பட்டுள்ளதாகவும் அமைச்சர் தெரிவித்தார்.

பின்னர் செய்தியாளர்களை சந்தித்த திரு ஜெ பி நட்டா, அடுத்த தலைமுறைக்காக கொண்டு வரப்பட்டுள்ள ஜிஎஸ்டி சீர்திருத்தங்கள் பண்டிகை காலத்தில் மக்கள் தாராளமாக பொருட்களை வாங்குவதற்கும், பணத்தை சேமிப்பதற்கும் உதவிகரமாக இருக்கும் என்றும் கூறினார்.

>><><><><<

திரிபுரா மாநிலத்தில் உள்ள மாதா திரிபுரசுந்தரி கோயில் PRASHAD திட்டத்தின்கீழ் திருப்பணிகளை பிரதமர் திரு நரேந்திர மோடி இன்று தொடங்கி வைத்தார்.

அகர்தலாவில் இருந்து ஹெலிகாப்டர் மூலம் உதய்பூர் சென்ற பிரதமருக்கு அம்மாநில மக்கள் உற்சாக வரவேற்பு அளித்தனர்.

மாதா திரிபுராசுந்தரி கோயிலில் சிறப்பு பூஜையில் கலந்து கொண்ட பிரதமர், பல நூற்றாண்டுகளாக பாதுகாக்கப்பட்ட

வளமான கலாச்சார பாரம்பரிய சின்னங்களை அங்குள்ள கண்காட்சியில் பார்வையிட்டார்.

முன்னதாக, அருணாச்சலப்பிரதேச மாநிலம் இட்டா நகரில், தேயிலை, ஊறுகாய், மஞ்சள், கைவினைப் பொருட்கள் ஆகியவற்றை உற்பத்தி செய்யும் தொழில் முனைவோர் மற்றும் அவற்றின் வர்த்தகர்கள் இடையே பிரதமர் கலந்துரையாடினார்.

சரக்கு மற்றும் சேவை வரி சீர்திருத்தங்கள், வர்த்தகர் மற்றும் தொழில் துறையினருக்கு சேமிப்பு திருவிழாவாக அமைந்துள்ளது என்று அவர் கூறினார்.

மீன்வளம், வேளாண்மை மற்றும் உள்ளூர் பொருட்கள் உற்பத்தித் துறையினருக்கு மிகவும் பயனுள்ள வகையில் ஜிஎஸ்டி சீர்திருத்தங்கள் அமைந்துள்ளதாகவும் திரு நரேந்திர மோடி கூறினார்.

>><><><><<

இந்தியாவின் வலிமையான படைப்பாற்றல் பொருளாதாரம், படத் தயாரிப்புகளில் கூட்டு முயற்சிகள் மற்றும் திரைத்துறையினருக்கான சலுகைகள் குறித்து சர்வதேச திரைப்பட விழாவில் தாம் எடுத்துரைத்ததாக மத்திய தகவல் ஒலிபரப்புத் துறை இணையமைச்சர் டாக்டர் எல் முருகன் தெரிவித்துள்ளார்.

தென்கொரியாவின் Busan நகரில் நடைபெற்று வரும் 30 ஆவது சர்வதேச திரைப்பட விழாவில் கலந்து கொண்ட டாக்டர் எல் முருகன், வட்ட மேஜை மாநாட்டில் இந்தியாவின் திரைப்படத்துறையின் வளர்ச்சிகள், சாதனைகள் குறித்து எடுத்துரைத்தார்.

இந்த விழாவில் இந்திய படைப்பாற்றல் துறையின் சிறப்புகளை எடுத்துக்கூறியது தமக்கு மிகுந்த மனநிறைவையும் மகிழ்ச்சியையும் அளித்ததாக அமைச்சர் குறிப்பிட்டார்.

தென்கொரியாவுடன் இணைந்து வளமான பொழுதுபோக்கு கட்டமைப்பை உருவாக்க இந்திய திரைத் துறையினர் பேரார்வம் கொண்டுள்ளதாகவும் டாக்டர் எல் முருகன் கூறினார்.

>><<><><><<

சரக்கு மற்றும் சேவை வரி சீர்திருத்தங்களால் அனைத்துத் தரப்பு மக்களும் பயன்பெற்று வருகின்றனர்.

அனைத்து அத்தியாவசிய மற்றும் உணவுப் பொருட்களின் விலை கணிசமாக குறைந்து மக்களின் மனதில் மகிழ்ச்சியை ஏற்படுத்தியுள்ளது.

தூத்துக்குடி மாவட்டத்தில் மருத்துவப் பயன்பாட்டிற்கான ஆக்ஸிஜன் உற்பத்தியாளர்கள் 12 சதவீதமாக இருந்த ஜிஎஸ்டி 5

சதவீதமாக குறைக்கப்பட்டு இருப்பதால் பெரிய மருத்துவமனைகள் முதல் சிறிய மருத்துவமனைகள் வரை பயன்பெற்று இருப்பதாகவும் இந்த சலுகைகள் சிகிச்சை பெறும் மக்களுக்கும் கிடைக்கும் என்று எதிர்பார்ப்பதாகவும் தெரிவித்தனர்.

(சவுண்ட் பைட் – சக்கரபாணி – 31 செகண்ட்ஸ்)

>><><><><<

நாகாலாந்து மாநிலத்தில் Khaplang பகுதியில் செயல்பட்டு வரும் தேசிய சோஷலிஸ்ட் கவுன்சில் மற்றும் அதன் அனைத்துப் பிரிவுகளையும் சட்ட விரோத அமைப்புகளாக மத்திய உள்துறை அமைச்சகம் அறிவித்துள்ளது.

இதுதொடர்பாக வெளியிடப்பட்டுள்ள மத்திய அரசின் அறிவிப்பாணையில் இம்மாதம் 28 ஆம் தேதி தொடங்கி ஐந்தாண்டுகளுக்கு இந்த தடை உத்தரவு நீடிக்கும் என்று குறிப்பிடப்பட்டுள்ளது.

தேசிய சோஷலிஸ்ட் கவுன்சில் மற்றும் அதன் துணை அமைப்புகள் நாட்டின் இறையாண்மைக்கும் ஒற்றுமைக்கும் பாதிப்பை ஏற்படுத்தும் வகையில் சட்ட விரோத நடவடிக்கைகளில் ஈடுபடுவதாக அதில் கூறப்பட்டுள்ளது.

காவல்துறையினர் 13 பேரை கொன்றதாக இந்த அமைப்பை சேர்ந்த 51 பேர் மீது நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளதையும் அதில் சுட்டிக்காட்டப்பட்டுள்ளது.

இந்த அமைப்பு அசாம் ஐக்கிய முன்னணி உள்ளிட்ட சட்ட விரோத அமைப்புகளுடன் இணைந்து செயல்பட்டதாகவும் மத்திய அரசு அறிவிப்பாணையில் குறிப்பிடப்பட்டுள்ளது.

>><><><><<

நாட்டில் எட்டு அடிப்படை உள்கட்டமைப்பு தொழில்களின் உற்பத்தி கடந்த மாதத்தில் ஆறு புள்ளி மூன்று சதவீதம் உயர்ந்துள்ளதாக புள்ளி விவரங்கள் தெரிவிக்கின்றன.

எஃகு, நிலக்கரி, சிமெண்ட், மின்சாரம், பெட்ரோலியம் ஆகிய தொழில்கள் கடந்த மாதத்தில் முந்தைய ஆண்டைக் காட்டிலும் கூடுதல் வளர்ச்சியை பெற்றிருப்பதாக தெரிய வந்துள்ளது.

எஃகு உற்பத்தி 14 புள்ளி 2 சதவீதமும், நிலக்கரி 11 புள்ளி 4 சதவீதமும், சிமெண்ட் உற்பத்தி ஆறு புள்ளி ஒரு சதவீதமும் உயர்ந்துள்ளதாக புள்ளி விவரங்கள் தெரிவிக்கின்றன.

எட்டு முக்கிய அடிப்படை தொழில்களின் வளர்ச்சி இவ்வாண்டு ஜூலை மாதம் மூன்று புள்ளி ஏழு சதவீதமாக இருந்தது.

>><><><><<

தலைநகர் தில்லியில் மின்சார பேருந்துகளின் எண்ணிக்கை அடுத்த இரண்டாண்டுகளில் இரட்டிப்பாகும் என்று முதலமைச்சர் திருமதி ரேகா குப்தா தெரிவித்துள்ளார்.

புதுதில்லி ஹரி நகரில் மூன்றடுக்கு பேருந்து நிலையத்திற்கு அடிக்கல் நாட்டி பேசிய அவர், தற்போது மூவாயிரம் மின்பேருந்துகள் இயக்கப்படுவதாகவும், அடுத்த ஆண்டுக்குள் இது ஆறாயிரமாக உயரும் என்றும் கூறினார்.

தலைநகரின் அனைத்துப் பகுதிகளுக்கும் பேருந்து வசதி கிடைக்கப் பெற வேண்டும் என்ற நோக்கில் லட்சிய தில்லி தொலைநோக்கு திட்டத்தின்கீழ் மூன்றடுக்கு பேருந்து நிலையம் அமைக்கப்படுவதாக அவர் தெரிவித்தார்.

இந்த பேருந்து நிலையத்தில் நான்காயிரத்திற்கும் மேற்பட்ட பேருந்துகள் நிறுத்துவதற்கான வசதி செய்து தரப்பட்டுள்ளதாகவும், மின்சார பேருந்துகள் சார்ஜ் செய்வதற்காக 84 மையங்கள் அமைக்கப்படுவதாகவும் திருமதி ரேகா குப்தா குறிப்பிட்டார்.

>><><><><<

ஜம்மு கஷ்மீரின் உதம்பூர், தோடா மற்றும கிஸ்துவார் மலைப் பகுதிகளில் மேற்கொள்ளப்பட்டு வரும் தீவிரவாதத்திற்கு எதிரான

நடவடிக்கைகளை அப்பகுதிக்கான ராணுவ படை தளபதி லெப்டினன்ட் ஜென்ரல் திரு பி கே மிஸ்ரா இன்று ஆய்வு செய்தார்.

உதம்பூர் மாவட்டத்தில் உள்ள வனப் பகுதிகளில் தீவிரவாதிகளை தேடும் பணியை பாதுகாப்புப் படையினர் முடுக்கி விட்டிருக்கும் நிலையில் லெப்டினன்ட் ஜென்ரல் பி கே மிஸ்ராவின் ஆய்வு முக்கியத்துவம் பெறுவதாக எமது ஜம்மு செய்தியாளர் தெரிவிக்கிறார்.

கடந்த வெள்ளிக்கிழமை அன்று தீவிரவாதிகளை தேடும் பணியில் ஈடுபட்டிருந்த வீரர்கள் மீது துப்பாக்கிச்சூடு நடத்தப்பட்டதை அடுத்து அப்பகுதிகளில் தேடுதல் வேட்டை முடுக்கி விடப்பட்டுள்ளது.

இதனிடையே கத்துவா மாவட்டத்தில் உள்ள மல்ஹார் பகுதியில் தீவிரவாதிகளின் நடமாட்டம் இருப்பதாக கிடைத்த தகவலை அடுத்து அவர்களை சுற்றி வளைக்கும் பணியில் பாதுகாப்புப் படையினர் ஈடுபட்டுள்ளனர்.

>><><><><<

ஒடிசா மாநிலத்தில் ஆங்காங்கே கன மற்றும் மிக கனமழை பெய்யக்கூடும் என்று இந்திய வானிலை ஆய்வு மையம் தெரிவித்துள்ளது.

அசாம், மேகாலயா, நாகாலாந்து, மணிப்பூர், மிசோரம், திரிபுரா, மேற்கு வங்கம், மேற்கு மத்தியப்பிரதேசம், மத்திய மகாராஷ்டிரா, கோவா, கேரளா, வடக்கு கர்நாடகா, தெலங்கானா ஆகிய பகுதிகளில் அடுத்த 3 நாட்களுக்கு கனமழை பெய்யக்கூடும் என்றும் வானிலை அறிக்கை கூறுகிறது.

அந்தமான் நிகோபார் தீவுகள் மற்றும் கடலோர ஆந்திரப்பிரதேசத்தில் இடி மின்னலுடன் கூடிய மழை பெய்யக்கூடும் என்றும் இந்திய வானிலை ஆய்வு மையம் கூறியுள்ளது.

>><><><><<

விளையாட்டுச் செய்திகள்

ஆசிய Cadet வாள்வீச்சு போட்டியில் இந்தியா 3 தங்கம், 3 வெள்ளி, 8 வெண்கலப் பதக்கங்களை வென்றது.

உத்தராகண்டின் Haldwani-யில் நடைபெற்ற இப்போட்டியின் ஒட்டுமொத்த சாம்பியன் பட்டத்தையும் இந்தியா கைப்பற்றியது.

---------------

ஜோஹர் கோப்பை ஹாக்கிப் போட்டிக்கான இந்திய அணி அறிவிக்கப்பட்டுள்ளது.

ரோஹித் தலைமையிலான இந்த அணியில் 18 பேர் இடம்பெற்றுள்ளனர்.

இப்போட்டி மலேசியாவில் அடுத்த மாதம் 11 ஆம் தேதி தொடங்கி 18 ஆம் தேதி வரை நடைபெறவுள்ளது.

----------------

இலங்கையில் நடைபெற்று வரும் 17 வயதிற்குட்பட்டோருக்கான தெற்காசிய கால்பந்துப் போட்டியில் இந்தியா 3-2 என்ற கோல்கணக்கில் பாகிஸ்தானை வென்றது.

----------------

துனிஷியாவில் நடைபெற்றுவரும் சர்வதேச டென்னிஸ் போட்டியின் முதலாவது தகுதிசுற்று ஆட்டத்தில் இந்தியாவின் மாயா ராஜேஷ்வரன் வெற்றிபெற்றார்.

*>> End of News <<*